DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : STC 261/2021

Complainant Witness : PW 1

| பெயர்: | ஆயிமுத்து | ஜாதி: | |
|---|---|---|---|
| தந்தை / கணவர் பெயர் : | கந்தசாமி கவுண்டர் | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 08/04/2026

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் எதிரியின் அடையாளம் குறித்து எந்தவொரு ஆட்சேபனையும் இல்லை என்று மேற்குறிப்பு செய்ததன் பேரில் BNSS பிரிவு 355 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**புகார்தாரர் எதிரி தரப்பில் மனுவின் பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு குறுக்குவிசாரணை** :

1) நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள மனு, நிரூபண வாக்குமூலம், வழக்கறிஞர் அறிவிப்பு ஆகியவற்றில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எனக்கு ஆங்கிலத்தில் எழுதபடிக்க தெரியுமா என்றால் தெரியாது, நான் தமிழில் தான் கையெழுத்து செய்வேன். என்னிடம் காட்டப்படும் வழக்கறிஞர் அறிவிப்பு ஆங்கிலத்தில் உள்ளது, அதில் உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் என்னுடைய வழக்கறிஞர் அதில் உள்ள சங்கதிகளை எனக்கு தமிழில் எடுத்துரைத்தார். நான் அதை புரிந்து கொண்டு கையொப்பம் செய்தேன். என்னிடம் குறிப்பிட்டு காட்டப்படும் வழக்கறிஞர் அறிவிப்பில் மூன்றாவது பாராவில் என்ன இருக்கிறது என்று கேட்டால் தமிழில் எனக்கு விளக்கி கூறினால் தெரியும். எனக்கு எத்தனை குழந்தைகள் என்றால் இரண்டு குழந்தைகள். மணிமாறன் யார் என்றால் என்னுடைய மருமகன். இந்த காசோலை வழக்கை எந்த மாதம், தேதியில் தாக்கல் செய்தேன் என்றால் 2021 ஆம் வருடம் தேதி ஞாபகம் இல்லை.

2) வழக்கின் காசோலை எண் என்ன என்றால் காசோலை எண் 00032 ஆகும். எதிரி காசோலை வழங்கிய வங்கியின் விவரம் என்ன என்றால் சிட்டி யூனியன் பேங்க், சின்மையா நகர், சென்னை. இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட காசோலையானது எனது மருமகன் எதிரியிடமிருந்து மிரட்டி வாங்கியது என்றாலும், இந்த வழக்கு

காசோலையை ரெக்கவரி செய்வது சம்பந்தமாக சென்னை சிட்டி சிவில் கோர்ட்டில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றாலும் சரியல்ல. எனது மருமகன் எதிரியிடமிருந்து மிரட்டி பெற்றுக் கொண்ட காசோலையை திரும்ப பெறுவதற்கான வழக்கு சிட்டி சிவில் கோர்ட்டில் நடைபெற்று வருவதால் அந்த விவரங்கள் அனைத்தையும் தெரிந்த எனது மருமகன் மணிமாறன் எனது பெயரை இரவலாக பெற்றுக் கொண்டு இந்த பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

3) எனது மருமகன் மணிமாறனின் முகவரி எனக்கு தெரியுமா என்றால் துபாயில் இருக்கும் முகவரி எனக்கு தெரியாது. தமிழ்நாட்டில் உள்ள முகவரி என்ன என்றால் திண்டுக்கல் மாவட்டம், பிரம்மநாயகன்புரம். எதிரியை எனக்கு யாரென்று தெரியாது என்றால் எதிரி திலகவதியின் மகன் எனது மருமகனின் நண்பர் என்ற முறையில் எனது மருமகன் எனக்கு சொல்லித்தான் எனக்கு தெரியும். எனது மருமகனுக்கு எதிரி திலகவதி கொடுத்த காசோலைத்தான் இந்த வழக்கில் எனக்கு கொடுத்ததாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் இந்த காசோலைக்கும் எனது மருமகனுக்கும் எந்த சம்பந்தமில்லை எதிரி இந்த காசோலையை என்னிடம் தான் கொடுத்தார். எதிரியை எனக்கு யாரென்றே தெரியாது. இந்த வழக்கிற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிய்லல. எனது மருமகனும், எதிரி திலகவதியின் மகனான பிரவீன்ராஜ் அபுதாவில் கூட்டாக ஹோட்டல் பிஸ்னஸ் செய்தார்கள் என்றாலும், அதில் பிரவின்ராஜ் என்பவரின் பங்கை என்னுடைய மருமகனுக்கே விற்றுவிட்டார் என்றால் அந்த விபரங்கள் எனக்கு தெரியாது. அவ்வாறு பிரவின்ராஜுக்கு சொந்தமான பங்கை எனது மருமகன் பிரவின்ராஜின் தாய் தந்தையரான எதிரி திலகவதி மற்றும் அவரது கணவரின் வங்கி கணக்கிற்கு செலுத்தியுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. நான் ரொக்கமாக வடபழனியில் உள்ள ஹோட்டலில் வைத்து எனது மருமகனிடம் கொடுத்து, எதிரி திலகவதியிடம் கொடுக்கப்பட்டது. பணம் கொடுக்கும்போது நான் எனது மருமகன் , திலகவதி மற்றும் அவரது கணவர் கிருபாகரன் அனைவரும் ஒரே இடத்தில் தான் இருந்தோம்.

4) நான் எனது மருமகன் மூலம்தான் பணம் கொடுத்தேன். அதனால் எனது மருமகனை விசாரித்தால் தான் வழக்கின் உண்மை புலப்படும் என்றால் சரியல்ல. எனக்கும் எதிரிக்கும் நேரடியாக எந்த தொடர்பும் இல்லை என்றாலும், எனது மருமகனுக்காகத்தான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது மருமகன் வழக்கின் காசோலையை பிரவின்ராஜின் கடவுச்சீட்டை ரத்து செய்துவிடுவேன் என்று மிரட்டித்தான் இந்த காசோலையை பெற்றார் என்றால் சரியல்ல. நான் கொடுத்த பணத்திற்குத்தான் எதிரி இந்த காசோலையை எனக்கு அளித்தார். எனது மருமகன் பிரவின்ராஜிடமிருந்து அதிக பணம் பறிக்கவேண்டும் என்ற நோக்கில் இந்த காசோலையை பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. நான் ஏன் திலகவதியின் கணவர் கிருபாகரனிடமிருந்து காசோலையை பெறாமல் எதிரி திலகவதியிடமிருந்து பெற்றேன் என்றாலும் திலகவதி வேலை பார்ப்பவர். மாற்றுமுறை ஆவண சட்டத்தின் சட்டப்பிரிவுகளை இந்த வழக்கு பூர்த்தி செய்யாத காரணத்தினால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. இந்த வழக்கை எதிரி திலகவதி வயதான அவரது கணவரை அழக்கழிப்பு செய்ய வேண்டும் என்ற

நோக்கத்தோடு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கை தாக்கல் செய்ததன் மூலமாக எதிரியை மன உளைச்சலுக்கு ஆளாக்கியுள்ளீர்கள் என்றால் சரியல்ல. எதிரியை காட்டிலும் எனக்கு வயது அதிகம். பணம் கொடுத்துவிட்டு எனக்குத்தான் மன உளைச்சலாக உள்ளது.

5) இந்த வழக்கை தாக்கல் செய்ததன் மூலமாக எதிரிக்கு ஏற்பட்ட பொருளிழப்பு மற்றும் மன உளைச்சலுக்கு நான்தான் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கின் சங்கதிகளை முன்னுக்குப்பின் முரணாக சொல்லியுள்ளேன் என்றாலும் அதனால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல. நான் உண்மையைத்தான் சொல்லியுள்ளேன். நான் எதிரிக்கு எத்தனை வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால், அவர் வீட்டிற்கும், வேலை பார்க்கும் இடத்திற்கும் அனுப்பினேன். நான் அனுப்பிய அறிவிப்பிற்கு எதிரி தரப்பில் பதில் அளிக்கவில்லை என்றால் சரிதான்.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

PRAVEENA SUBBARAYAN

Digitally signed by PRAVEENA SUBBARAYAN
Date: 2026.04.08 17:34:31 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 08/04/2026